**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.455** **நாள்: 08.12.2023**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை மற்றும் கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை மற்றும் கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் திரு.வி.க.நகர் மண்டலம், புளியந்தோப்பு, டிமல்லஸ் சாலையில் உள்ள நீரேற்று நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வெளியேற்றும் பணியினையும் குருசாமி கால்வாயில் மழைநீர் வெளியில் செல்லும் வகையில் குப்பை கழிவுகளை அகற்றும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, ஸ்டீபன்சன் சாலை, செங்கை சிவம் மேம்பாலத்தின் அருகில் நீர் வெளியேற்றும் நிலையத்தின் மூலம் ஓட்டேரி நல்லா கால்வாயில் மழைநீர் வெளியேற்றும் பணியினையும், பட்டாளம், ஓட்டேரி நல்லா கால்வாயில் நீர்வரத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, அண்ணாநகர் மண்டலம், 6வது அவென்யூவில் வெளிமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளைப் பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், கோடம்பாக்கம் மண்டலம், பசுல்லா சாலையில் மழைநீர் வடிகால்களில் மழைநீர் செல்வதைப் பார்வையிட்டு, வண்டல்கள் உள்ளதா என ஆய்வு செய்தார். மேலும், தேனாம்பேட்டை மண்டலம், ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன் சாலை, வீனஸ் காலனியில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றப்பட்டுள்ளதையும், அவ்விடத்தில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், பி.எஸ்.சிவசாமி சாலையில் நடைபெற்ற மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர் திரு.பி.கணேசன், இ.ஆ.ப., திரு.எம்.பிரதாப், இ.ஆ.ப., திரு.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**